අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

# 2018

# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# Annual Report


රජයේ මුද්‍රණ නීතිගත සංස්ථාව
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
State Printing Corporation

ஆண்டறிக்கை,
கணக்குக் கூற்றுக்கள் மற்றும்
கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# 2018

# ஆண்டறிக்கை

2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த 51 வது ஆண்டுக்கானது.
2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து
2018 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை

## நிறுவனத்தின் நோக்கு

அச்சுத் தொழிலில் முன்னோடியாக திகழ்வதன் மூலம் வெளியீட்டில் அதிலும் குறிப்பாக கல்வி அபிவிருத்தி வெளியீட்டை ஊக்குவித்து பாதுகாப்பதுடன் அப்பியாச புத்தக மற்றும் காகிதம் உட்பட எழுதுவதற்கு தேவையான பொருள்களின் விற்பனை மற்றும் சந்தை ஆகியவற்றில் முன்னோடியாக திகழுதல்.

## பணி

திறமையும் தைரியமும் மிக்க மனநிறைவு கொண்ட ஊழியர்களைக் கொண்ட முன் உதாரணமான அரச கூட்டுத்தாபனமாக திகழ்வதுடன் அச்சுத் தொழிலில் அதி உயர் தரத்திற்கு ஏற்ப போட்டியான விலைக்கு அச்சுப் பொருள் உற்பத்திகளை மக்களின் தேவை மற்றும் நலம் கருதி விநியோகித்தல்.

பானலுவ,
பாதுக்க.

கௌரவ கல்வி அமைச்சர்,
கல்வி அமைச்சு,
இசுருபாய
பத்தரமுல்ல

கௌரவ அமைச்சர்,

நிதிச் சட்டம் இலக்கம் 38, 1971, 14 வது பிரிவின்படி, 1, ஜனவரி இலிருந்து 31.12.2018 வரைக்குமான ஆண்டு தொடர்பாக பின்வருவனவற்றை பணிப்பாளர் சபையின் சார்பில் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

1. அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கை.
2. கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை, செயலாற்று கணக்குகள் மற்றும் இலாப, நட்ட கணக்கு.
3. கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்துரைகள்.

தங்களின் கவனத்திற்காக முன்வைக்கின்றேன்.

தங்கள் விசுவாசமுள்ள,

**ஜனக ரத்னகுமார**
தலைவர்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்



# தலைவரின் செய்தி

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் என்ற ரீதியில் சென்ற வருடத்திற்குரிய ஆண்டறிக்கைக்கான செய்தியொன்றை வெளியிடுவதற்குக் கிடைத்த வாய்ப்பை பெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

1968 இல. 24 ஆம் சட்டக்கோவைக்கிணங்க 1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க அச்சக் கூட்டுத்தாபனத்தை ஆரம்பித்து 52 வருடங்களை கடந்த நிலையில் அச்சிடல் துறையில் ஏற்பட்ட பின்தங்கிய நிலை, நிறுவனத்திற்கு புதிய ஒருவராக நான் மற்றும் நீண்டகாலமாக சேவை செய்து கொண்டிருக்கும் உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இதனை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் கல்வி அமைச்சின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் இலங்கை நாட்டின் மாணவர் சமூகத்திற்கு பாடசாலை அச்சுப் புத்தகங்கள் மற்றும் வியாபார நாமத்தில் பயிற்சிக் கொப்பிகள், எழுதுகருவிகள் மற்றும் அரச பதிவேடுகள் பாதுகாப்பான அச்சிடல் வேலைகள் மேற்கொள்ளப்படுவதானது நாட்டுக்கு மற்றும் சமூகத்திற்கு வழங்கப்படுகின்ற உன்னதமான தொண்டாகும்.

நிதி பற்றாக்குறையினால் நட்டத்தில் இயங்குகின்ற அரச நிறுவனங்களை மீண்டும் இலாபம் தருகின்ற நிலைமைக்கு கட்டியெழுப்புதல் அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் நோக்கமாகும். இதனூடாக பயணிக்கின்ற கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆசிர்வாதத்துடனும் கௌரவ கல்வி அமைச்சர் டலஸ் அலகப்பெரும அவர்களின் ஆலோசனை, வழிகாட்டல் மற்றும் உதவியுடன் மற்றும் கௌரவ கல்வி இராஜாங்க அமைச்சர் ரன்ஜித் சியபலாப்பிட்டிய அவர்களின் மேற்பார்வையுடனும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்ற ரீதியில் மேற்குறிப்பிட்ட நோக்கங்களை முடியுமான அளவு வெற்றியளிப்பதற்கு என்னுடைய உயர்ந்த எதிர்பார்ப்பாகும்.

நிறுவனம் மற்றும் அங்கத்தவர்களின் மனிதவள உற்பத்தித் திறன் மேன்படுத்தல், சர்வதேச ரீதியாக நேசமிக்க சூழல் ஒன்று ஏற்படுத்தும் முகமாக நூதனமுறையொன்றை இந்நிறுவனத்தை கட்டியெழுப்ப அவசியமான அதன் பயன் மற்றும் பெறுமதியை நான் நன்கு உணர்ந்து விளங்கி வைத்துள்ளேன். நவீன வர்த்தக சந்தை உலகில் முக்கியமான பிரிவான தொழிநுட்பத்தை கூட்டுத்தாபனத்தில் இணைத்துக் கொள்வதும் நிறுவனம் உங்களுக்காக மேலும் மேலும் உறுதி மிக்கதாக மற்றும் விரும்பத்தக்க தொழில் செய்யும் இடமாக மாற்றியமைப்பதற்கும் அபிவிருத்தியடைந்த தொழிநுட்பத்தை எமது நிறுவனத்துக்கு ஏற்புடைய வகையில் பயன்படுத்தி கட்டாயமாக இதனை நடைமுறைப்படுத்தும் தேவை எழுந்துள்ளது.

கூட்டுத்தாபனத்திற்கு இணைந்த குறுகிய காலத்துக்குள் இதனை நான் உணர்ந்துள்ளேன். இதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் மனிதவள அபிவிருத்தி பற்றிய பயிற்சி கூட்டுத்தாபனத்தின் இருப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் நியாயமான இலாபத்துடன் கூட்டுத்தாபனத்திற்குள் நிதி பற்றாக்குறையை குறைத்து நிறுவனத்தை விருத்தி செய்வது எனது பிரதானமான எதிர்பார்பாகும். இதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் சேவை செய்கின்ற ஊழியர்களின் நலனோன்பல் நடவடிக்கைகளை விருத்தி செய்தல் எமது பிரதானமான இலக்காகும். சவால் மற்றும் நோக்கங்களை வெற்றி கொள்ளும் தலைவர் பொறுப்பை பொறுப்பேற்றேன். இவ் இலக்கை அடைவதற்காக வேண்டி ஊழியர்களின் பங்களிப்பு மற்றும் பொறுப்பு அவசியமானது என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி என்ற கருப்பொருளை நோக்காக கொண்டு அனைத்து ஊழியர்களுக்கும் நேரான செயற்பாட்டை முன்வைத்து யோசணை மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி பொருளாதாரம், சுற்றாடல் உறுப்பினர்களை மேம்படுத்தல் போன்ற மூன்று செயற்திட்டங்களின் மூலம் இந்நிறுவனம் அச்சிடல் துறையில் முதன்மையாளராக கொண்டு வருவதற்கும் அதன் மூலம் கிடைக்கப் பெறுகின்ற கௌரவம், மதிப்பு மற்றும் புகழ் இதற்காக ஒன்றிணைந்து முயற்சித்து பங்களிப்பு செய்த அனைவருக்கும் தலைவர் என்ற ரீதியில் எனது நோக்கம் மற்றும் எதிர்பார்ப்புமாகும்.

**ஒன்றுபடுவோம், செயற்படுவோம், மகிழ்ச்சியடைவோம்.**

**ஜனக ரத்னகுமார**
தலைவர்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# 2018
# பணிப்பாளர் சபை

**தலைவர்**

திரு. எஸ். ஆலோக பன்டார (2017.12.18 - 2018.05.24)
திரு. எஸ். ஏ. பினர ஜயவர்தன (2018.05.24 - 2018.10.26)

**வேலை பணிப்பாளர்**

திரு. பன்துல டயஸ் (2017.06.29 - 2018.03.19)
திரு. பீ. எம். பியதாச (2018.03.19 - 2018.05.21)
திரு. மஹிந்த புஷ்பகுமார (2018.05.21 - 2018.10.26)

**பணிப்பாளர்கள்**

1. திருமதி நாலிகா எதிரிசிங்க
2. திரு. நஹீல் ஹபுஆரச்சி
3. திரு. ஜீ. எம். நீல் குணதாச
4. திரு. ரோஹண ரத்நாயக்க
5. திரு. ஜே. ஆர். டீ. ஜயதிலக
6. திருமதி எம். எம். பி. கே. மீகஹகொடுவ
7. திருமதி பத்மினி நாலிகா
8. திரு. டப்லியு. ஏ. விஜயாநன்த

# 2018
# நிறைவேற்று அதிகாரிகள்

**பொது முகாமையாளர்**
திரு. ஆர். எம். என். மொனறவில

**நிதி முகாமையாளர்**
திரு. என். டி. பிரியங்கர குமார

**வேலை முகாமையாளர்**
திரு. எஸ். டீ. கருணாரத்ன

**விநியோக முகாமையாளர்**
திரு. ஈ. வீ. கே. கீர்த்திரத்ன

**முகாமையாளர்**
**(நிர்வாக, மனித வளங்கள் அபிவிருத்தி)**
திரு. ஆர். எம். யூ. டி. பண்டார

**சந்தைப்படுத்தல் முகாமையாளர்**
திரு. எம். டீ. ஜே. பெரேரா

**பிரதி வேலை முகாமையாளர்**
திரு. டீ. எம். எம். பீ. திசாநாயக்க

**பிரதி வேலை முகாமையாளர்**
திரு. டீ. எம். ஆர். என். தென்னகோன்

**பிரதி நிதி முகாமையாளர்**
திரு. கே. எச். திலகரத்ன

**முகாமையாளர் (காகிதாதிகள் தொழிற்சாலை)**
திரு. எல். டீ. பிரேமசிறி

**கணக்காளர்**
திரு. எம். ஆர். பீ. ஜயவர்தன

**கணக்காளர்**
திரு. டப். எல். தெனியகே

**உள்ளக கணக்காய்வாளர்**
திரு. எம். எஸ். எஸ். மொஹொட்டி

**உதவி வேலை முகாமையாளர் (மதிப்பீடு)**
திரு. கே. டீ. டீ. சந்திரசிறி

**உதவி வேலை முகாமையாளர்**
**(பாதுகாப்பு அச்சிடல் பிரிவு)**
திரு. எம். ஏ. கொதலாவல

**உதவி வேலை முகாமையாளர் (செயற்பாடு)**
திரு. எஸ். டீ. குமாரசிங்க

**உதவி வேலை முகாமையாளர்**
**(புத்தகம் கட்டுதல்)**
திரு. எம். ஏ. சாந்த குமார

**உதவி வேலை முகாமையாளர் (லிதோ)**
திரு. பீ. கே. திலக் மஹிந்த

**உதவி முகாமையாளர் (விற்பனை)**
திரு. எச். ஆர். குணசேகர

**உதவி முகாமையாளர் (பாதுகாப்பு)**
திரு. டப். டப். எம். ஆரச்சிகே

**உதவி முகாமையாளர்**
**(நிர்வாக, மனித வளங்கள் அபிவிருத்தி)**
திரு. கே. எச். பீ. சஜீவ

**உதவி முகாமையாளர்**
**(சட்டம் பணிப்பாளர் சபையின் செயலாளர்)**
திரு. ஏ. எல். ஆர். மதுகாணி

**உதவி முகாமையாளர் (வெளியீடு)**
திரு. மதுரங்க சீ. நுவன்ப்பிரிய

**உதவி முகாமையாளர் (வழங்கல்)**
திரு. யூ. அனில் ஜயகாந்த

**கணக்காளர்**
திரு. டப். ஏ. ஏ. எஸ். ஜயசுந்தர

**உதவி வேலை முகாமையாளர் (பராமரிப்பு)**
திரு. என். ஜீ. எல். சன்திமால்

# 2018

## பணிப்பாளர் சபையின் அறிக்கை

நிதிச் சட்டம் இலக்கம் 38, 1971, 14 வது பிரிவுன்படி, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை 31. 12. 2018 இல் முடிவடைந்த ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கிய 50 ஆவது அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.


மதிப்பீட்டு ஆண்டில் 11 சபைக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 01. உற்பத்தி

### 1.1 பாடசாலை பாட நூல்கள்


### 1.1.1 பாடசாலை நூல்களை அச்சிடுதல்

பாடசாலைப் பாடப்புத்தகங்களை அச்சிடும் நோக்கில் நிறுவப்பட்ட கூட்டுத்தாபனம் திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து வேறு உற்பத்திப் பிரிவுகளை நோக்கி விரிவடைந்துள்ளது. அத்துடன் பாடசாலைப் பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணி நேரடியாக கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைப்பதற்கு பதிலாக கேள்விப் பத்திரங்கள் ஊடாகப் போட்டி அடிப்படையில் கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தின் கட்டளைகளைக் கூட்டுத்தாபனம் பெற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டது. எனினும் இம்முறைமை மாற்றப்பட்டு 2018 ஆண்டிலும் கேள்விப் பத்திர நடைமுறைக்கு புறம்பாக பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணி கூட்டுத்தாபனத்திற்கு அளிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது. இதற்கு அமைவாக 2018 ஆண்டிலும் 4.485 மில்லியன் பாடசாலைப் பாடப்புத்தங்களின் பிரதிகளை அச்சிட்டதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு 428.627 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்தது.




பகுப்பாய்வு ஆண்டில் அச்சிடப்பட்ட பாடசாலை பாடப்புத்தகங்களின் பிரதிகளின் எண்ணிக்கை மற்றும் அதன் மூலம் கிடைத்த வருமானம் 2016 மற்றும் 2017 க்கு ஒப்பீட்டு அடிப்படையில் பின்வருமாறு

| பாடசாலை அச்சு வேலை | 2016 ('000) | 2017 ('000) | 2018 ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 10,984 | 7,981 | 4,485 |
| வருமானம் - ரூபா | 855,865 | 676,391 | 428,627 |




### 1.2 ஏனைய அச்சு சேவைகள்


பகுப்பாய்வு ஆண்டில் அறநெறி பாடசாலை பாடப்புத்தகங்கள் அச்சிடல் சேவைகள் (அதிஷ்ட இலாபச்சீட்டுகள், ரிதிரேகா, வங்கி சேமிப்பு சான்றிதழ் பத்திரங்கள், தபால் வைப்பு புத்தங்கள், லேபல்கள், எயார்போர்ட் சுப்பர் டிரோ முதலியன) மற்றும் அரச நிறுவனங்களுக்கான அச்சிடல் சேவைகள் வழங்கப்பட்டன. இதனைத் தவிர வெவ்வேறு நிறுவனங்களின் அச்சுப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன. விஷேட அச்சிடல் சேவைகள் சில கீழ்வருமாறு.

### 1.2.1 பாதுகாப்பு அச்சிடும் பணி

தேசிய லொத்தர் சபைச் சபைக்காக மஹஜன சம்பத இற்றைவரை 44 ஆண்டுகள் அச்சிடப்பட்டுள்ளது. இதனைத் தவிர எயார்போர்ட் லொத்தரும் அச்சிடப்பட்டுள்ளது. லொத்தர் சபைச் சபையிடமிருந்து கிடைத்த சகல அச்சிடல் கட்டளைகளும் அச்சிடப்பட்டதுடன், 2018 ஆண்டில் அச்சிடப்பட்ட லொத்தர்களின் எண்ணிக்கை 428 மில்லியனாகும். இதற்கு அமைவாக வருமானம் 249 மில்லியன் ரூபாவாகும். லொத்தர் அச்சிடலின் வருமானமும் பிரதிகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு.


| லொத்தர் அச்சிடுதல் வேலை | 2016 ('000) | 2017 ('000) | 2018 ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 428,902 | 399,739 | 427,415 |
| வருமானம் - ரூபா | 245,060 | 233,947 | 248,011 |

லொத்தர் அச்சிடுதல்




லொத்தர் சீட்டுக்களின் தொகை

லொத்தர் அச்சிடுதல்




லொத்தர் அச்சிடுதலில் இருந்து கிடைத்த வருமானம்

### 1.2.2 வேறு அச்சு சேவைகள்

அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களை போன்று தனியார்துறையின் கட்டளைகளை பெற்றுக்கொள்வது குறித்து விசேட ஆர்வத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட விசேட அச்சிடல் சேவைகளில் பின்வரும் சேவைகள் முக்கியமானவையாக காணப்பட்டன.

01. பல நிறுவனங்களுக்கான ஆண்டறிக்கைகள்
02. அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கான பல்வகை அச்சுப் பணிகள்
03. பல்கலைக்கழக சான்றிதழ் பத்திரங்கள்
04. தேசிய மிருககாட்சிசாலைக்கான நுழைவுச் சீட்டுக்கள் மற்றும் ஏனைய விளம்பர கையேடுகள்
05. சினிமா டிக்கட்டுக்கள்
06. ஊழியர் சேமலாப நிதியத்தின் பல்வகை அச்சுப் பணிகள்
07. தேசிய சேமிப்பு வங்கயின் அச்சுப் பணிகள்
08. பரீட்சைத் திணைக்களத்திற்காக அச்சிடப்பட்ட விடை எழுதும் தாள் புத்தங்கள்
09. அறநெறி பாடசாலை புத்தகங்கள் அச்சிடல்

பல்வகை அச்சுப் பணிகளை நிறைவேற்றி கூட்டுத்தாபனம் ஈட்டிய வருமானம் ரூ. 154 மில்லியனாகும்.

### 1.3 அப்பியாசக் கொப்பிகளையும் ஏனைய காகிதாதிகளையும் தயாரித்தல்

பகுப்பாய்வு ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆண்டின் உற்பத்தி பின்வருமாறு.

| விபரம் | உற்பத்தி அளவு | பெறுமதி ரூபா |
|---|---|---|
| அப்பியாசக் கொப்பிகள் (80 பக்கம்) | மில்லியன் 5.769 | மில்லியன் 143,021 |
| CR கொப்பிகள் | மில்லியன் 0.877 | மில்லியன் 46,013 |
| ஏனைய காகிதாதிகள் | மில்லியன் 0.574 | மில்லியன் 49,299 |
| மொத்தம் | மில்லியன் 7.220 | மில்லியன் 238,333 |


அப்பியாகச் கொப்பிகளும் ஏனைய காகிதாதிகளும்




மதிப்பீட்டு ஆண்டில் உற்பத்தியும் 2016, 2017 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டு புள்ளி விபரங்கள்

| அப்பியாசக் கொப்பிகளும் ஏனைய காகிதாதியும் | 2016 ரூ. ('000) | 2017 ரூ. ('000) | 2018 ரூ. ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 9,869 | 10,785 | 7,220 |
| வருமானம் - ரூபா | 233,973 | 279,680 | 238,333 |

அப்பியாகச் கொப்பிகளும் ஏனைய காகிதாகிகளும்




எதிர்ப்பார்த்தவாறு எழுதும் தாள் கையிறுப்பு செப்டெம்டர் முதல் டிசம்பர் வரையான காலத்தில் என்பதால் 2018 ஆண்டில் இலக்கை எட்ட முடியவில்லை.

2018ம் ஆண்டு எதிர் பார்த்த உற்பத்தி இலக்கு மில்லியன் ரூபா12.12 (பெறுமதி மில்லியன் ரூபா 327)

## 02. விற்பனை/சந்தைப்படுத்தல்


2018ஆண்டில் மொத்த சந்தைப்படுத்தல் வருமானம் சிறியளவில் குறைவடைந்தது.

| வருடம் | 2016 ரூபா | 2017 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| மொத்த வருமானம் (வரி உட்பட) | 297,745,747.00 | 286,849,475.00 | 282,021,852.00 |

2016 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆண்டில் அப்பியாசக் கொப்பிகள் வருமானத்தின் குறையும் சதவீதம் 2018 ஆண்டின் குறைவடையும் சதவீதமான 3.7% அளவு 2018 ஆண்டில் 1.39% வரை வீழ்ச்சியடைந்துள்ளது. வருமானம் குறைவடைவதற்கு பிரதான காரணியான 2018 ஆண்டில் புத்தக உற்பத்திக்கு தேவையான மூலப்பொருள் விநியோக பற்றாக்குறையால் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

அதனைத் தவிர வெளி நிறுவனங்கள் ஊடாக கொள்வனவு செய்து மீண்டும் விற்பனை செய்வதற்கு பயன்படுத்தப்படும் எழுதுபொருட்களை 2018 ஆண்டில் எதிர்ப்பார்த்தவாறு பெற்றுக்கொள்ள முடியாமையினால் எதிர்ப்பார்த்த வருமானம் குறைவடைந்தது.

விற்பனை சந்தைப்படுத்தல்




கூட்டுத்தாபனம் மற்றும் வெளிப்புற எழுதுபொருட்கள் எதிர்ப்பார்த்தவாறு நிறைவு செய்ய முடிந்திருந்தால் இவ்வாண்டில் வருமானத்தை மேலும் 20% - 25% இடையிலான அளவில் அதிகரிக்க முடிந்திருக்கும்.

### வெளியீட்டுச் சேவை

வெளியீட்டுப் பிரிவுக்காக வெளியீட்டு முகாமையாளர் ஒருவர் மற்றும் உதவி ஊழியர் வழங்கப்பட்டிருந்தன. வெளியீட்டு பிரிவின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் கல்வி நூல் வெளியீட்டு கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு இணைவாக நாவல்கள் மற்றும் சிறுவர் கதைப் புத்தக வெளியீட்டு கருத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்துறையின் முந்திய ஆண்டில் கிடைத்த வருமானத்தை கருத்திற்கொள்ளும் போது, பகுப்பாய்வு ஆண்டில் அதற்கு முந்திய ஆண்டை விட ரூ. 1,997,634.80 விற்பனை காணப்பட்டது.

அத்துடன்,தற்போதுள்ளதை விட வருமானத்தை அதிகரிக்கக் கூடிய முறையியலொன்றைப் பற்றி எதிர்காலத்தில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 2018 வெளியிடப்பட்ட புதிய நூல்களின் எண்ணிக்கை | 13 |
| அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை | 21,285 |
| 2017 ஆண்டின் வெளியீட்டு வருமானம் | ரூபா 3,202,535.00 |
| 2018 ஆண்டின் வெளியீட்டு வருமானம் | ரூபா 5,200,169.80 |

## 03. நிலையான சொத்துக்கள்

2018ஆண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் நிலையான வைப்புக்களின் மொத்த கிரயம் ரூ.1155,212,071/-. அதன் தேறிய பெறுமதி ரூ.1,039,094,309/- ஆகும். இந்நிலைமை இதற்கு முந்திய வருடமான 2017 ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே ரூ.1,148,392,769/- மற்றும் ரூ.1,093,382,090/- ஆக காணப்பட்டது.

| நிலையான சொத்துக்கள் | 2016 ரூ.('000) | 2017 ரூ.('000) | 2018 ரூ.('000) |
|---|---|---|---|
| திறந்த பெறுமதி (செலவினத்தில்) | 397,198 | 872,653 | 1,148,393 |
| வருட முடிவில் சரியான பெறுமதி | 147,377 | 1,093,382 | 1,039,094 |

## 04. வரி பொறுப்பு


கூட்டுத்தாபன மதிப்பீட்டு ஆண்டுக்கான 2017/2018 வருமான வரி, பங்கிலாப வரியாக ஏதேனுமொரு தொகை கூட்டுத்தாபனத்தின் 2018 ஆண்டிறுதி கணக்குகளுக்கு ஏற்ப ஏற்பாடு செய்யப்படவில்லை.

| வரி பொறுப்பு | 2016 ரூ. ('000) | 2017 ரூ.('000) | 2018 ரூ.('000) |
|---|---|---|---|
| வருமான வரி | 324 | - | - |
| பங்குலாப வரி | - | - | - |
| மொத்தம் | 324 | - | - |

## 05. இலாபம்

2018ஆண்டில் கூட்டுத்தாபனம் ரூ. 406,985,154/- வரிக்கு முந்திய இலாபத்தை ஈட்டியுள்ளதுடன், 2017 ஆண்டில் ரூ. 243,094,833/- நட்டமடைந்தது“

| இலாபம் | 2016 ரூ.('000) | 2017 ரூ.('000) | 2018 ரூ.('000) |
|---|---|---|---|
| வரிக்கு முந்திய இலாபம் | (74,650) | (243,094) | (406,985) |
| வரி செலுத்திய பின்னர் | (74,974) | (243,094) | (406,985) |





2017 ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலாபம் மற்றும் வரி பொறுப்பு 2017 ஆண்டில் கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையின் அவதானிப்புகளுக்கு ஏற்ப 2018 ஆண்டில் மீள கணக்குகளை தயாரித்த போது மேற்கண்டவாறு திருத்தப்பட்டுள்ளது.

## 06. போனஸ்

2017 ஆண்டில் ரூ. 50,190,854 மிகை ஊதியமாக சகல ஊழியர்களினதும் இரண்டு மாத சம்பளத்திற்கு நிகராக கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும் 2018 ஆண்டில் நட்டம் 407 மில்லியன் ரூபாவாக காணப்பட்டதால் வழமையான மிகை ஊதியம் செலுத்தப்படவில்லை.

| போனஸ் | 2016 ரூ. ('000) | 2017 ரூ. ('000) | 2018 ரூ. ('000) |
|---|---|---|---|
| | 53,029 | 50,191 | 1,408 |




## 07. சேமநலன்

பின்வரும் நலன்புரிச் சேவைகள் மற்றும் வசதிகள் கடந்த ஆண்டு அடிப்படையில் இவ்வாண்டிலும் செலுத்தப்பட்டது. இதற்காக கூட்டுத்தாபனம் செலவிட்ட மொத்த தொகை ரூ. 69.8 மில்லியனாகும்.

| | சேமநலன் | 2016 ரூ.('000) | 2017 ரூ.('000) | 2018 ரூ.('000) |
|---|---|---|---|---|
| 01. | ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதிகள் | 4,877 | 11,012 | 10,879 |
| 02. | ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு | 6,075 | 6,020 | 5,263 |
| 03. | மருத்துவ வசதிகள் | 9,655 | 10,612 | 10,046 |
| 04. | பல்வேறு சேமநல வசதிகள் | 25,246 | 24,924 | 24,297 |
| 05. | ஊழியர் இழப்பீட்டு காப்புறுதி | - | - | - |
| 06. | சகல ஊழியர்களுக்கும் காகிதாதிகளுக்கான கொடை வவுச்சர்கள் | 1,646 | 1,685 | 1,703 |
| 07. | ஊழியர்களுக்கான போனஸ் | 53,029 | 50,191 | 1,408 |
| 08. | ஊழியர்களின் வீடமைப்பு கடன் வட்டியை மீளளித்தல் | 4,274 | 3,114 | 2,573 |
| 09. | பயன்படுத்தப்படாத விடுமுறைகளுக்கான கொடுப்பனவு | 16,409 | 15,607 | 13,615 |
| 10. | விசேட கொடுப்பனவு | 6,630 | 7,490 | - |
| | **மொத்தம்** | **127,841** | **130,657** | **69,748** |

## 08. ஆளணி

2018.12.31 ஆம் திகதியில் கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எண்ணிக்கை 648ஆகும்.

| **ஊழியர் எண்ணிக்கை** | **2018** |
|---|---|
| அலுவலகம் | 134 |
| பிரதான தொழிற்சாலை | 324 |
| காகிதாதி தொழிற்சாலை | 59 |
| பாதுகாப்பு பிரிவு | 41 |
| விற்பனை நிலையங்கள் | 38 |
| ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் | 52 |
| **மொத்த ஊழியர் தொகை** | **648** |

### 2018 ம் ஆண்டில் சேவைக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்கள்

2018 ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்கு உத்தியோகத்தர் மட்டத்திலான ஊழியர் எவரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

### 2018 ஆண்டில் சேவையில் இருந்து விலகிய நிறைவேற்று அதிகாரிகள்

| | **பெயர் / பதவி** | **திகதி** |
|---|---|---|
| 1. | திரு. எம்.ஏ சாந்த குமார<br>– உதவி முகாமையாளர் வேலை<br>(புத்தகம் கட்டுதல்) | 2018.03.01 |
| 2. | திரு. டீ.எம்.எம்.பீ. திசாநாயக்க<br>– பிரதி வேலை முகாமையாளர் | 2018.04.07 |
| 3. | திரு. ஆர்.எம்.யு.டீ. பண்டார – முகாமையாளர்<br>(நிர்வாக மற்றும் மனிதவள அபிவிருத்தி) | 2018.11.01 |

## முடிவு

கூட்டுத்தாபனத்தின் சகல ஊழியர்களும் கூட்டுத்தாபனத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு மனப்பூர்வமான ஒத்துழைப்பை தந்தமைக்காக தலைவரும், பணிப்பாளர்களும் நன்றி கூறுகிறார்கள்.

வெற்றிகரமான திட்டத்திற்கு வழிகாட்டுதலும் ஆதரவும் அளித்த கௌரவ கல்வி அமைச்சருக்கும் திட்டத்தை அமுல் செய்வதில் தொடர்ச்சியான ஆதரவை தந்த அமைச்சின் செயலாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் தலைவரும், பணிப்பாளர்களும் நன்றி கூறுகின்றார்கள்.

எதிர்வரும் ஆண்டுகளில் இதே ஒத்துழைப்பு வழங்கப்படுமென்று முகாமைத்துவம் நம்புகிறது.

**ஜனக ரத்னகுமார**
தலைவர்

# 2018

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2018 ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

## 1. கூட்டுத்தாபனம் பற்றிய தகவல்கள்

### 1.1 பொதுத் தகவல்

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் 1968 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் 1968 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் பணிப்பாளர் சபையிடம் கையளிக்கப்பட்டது. இது பாதுக்க, பானலுவவில் அமைந்துள்ளது.

### 1.2 முக்கிய செயற்பாடுகளும் செயற்பாட்டின் தன்மையும்

கூட்டுத்தாபனத்தின் முக்கிய செயற்பாடுகளாக பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுதல், பயிற்சிக் கொப்பிகளை தயாரித்தல் மற்றும் ஏனைய அச்சுப் பணிகள் என்பவற்றை குறிப்பிடலாம்.

### 1.3 வெளியிடுவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட திகதி

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2018. 12. 31 ஆம் திகதி நிதிக் கூற்றுக்கு 2019. 02. 25 ஆம் திகதிய பணிப்பாளர் சபையினால் வெளியிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

## 2. தயாரிப்பின் அடிப்படை

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு இணைவாக LKAS மற்றும் SLFRS என்பவற்றிற்கு ஏற்ப நிதி நிலைமை கூற்றுக்கள், விரிவான வருமான கூற்று, நிதி மாற்றங்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள், கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.1 மதிப்பீட்டு அடிப்படை

நிதிக்கூற்றுக்கள் திரட்டல் முறை மற்றும் தொன்மை கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.2 மதிப்பீட்டு அடிப்படை

கீழ்தரப்பட்ட குறிப்புக்கள் தவிர்ந்து நிதி கூற்றுக்கள் சீர்செய்யப்பட்டிருப்பது தொன்மை கிரய அடிப்படையிலாகும்.

* விரிவுபடுத்தப்பட்ட வருமானக் கூற்றின் குறிப்பிடப்பட்ட வட்டி வருமானம்.
* கணக்கிடப்பட்ட சொத்துக்களின் மீள் பெறுமதி

### 2.3 தொடர்ச்சியாக இயங்குதல்

கூட்டுத்தாபனத்தை நடாத்திச் செல்வ தற்கான ஆற்றல் சம்பந்தமாக பணிப்பாளர் சபை மதிப்பீடொன்றை மேற்கொண்டு கவனம் செலுத்தப்பட்டது. எவ்வாறிருந்தாலும் அதனை முடியுறுத்துவதோ அல்லது செயற்பாடுகளை நிறுத்துவதோ சபையின் நோக்கமல்ல.

### 2.4 பாவணையுள்ள காசு

இறுதியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது பாவணையிலுள்ள இலங்கை ரூபாவிலாகும். அனைத்து நிதி கூற்றுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளது இலங்கை ரூபா பெறுமதி அடிப்படையிலாகும். கிட்டிய ரூபா பெறுமதி காட்டப்பட்டுள்ளது.

### 2.5 கூட்டுத்தாபனத்தினால் முன்னைய

ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டு வந்த கணக்கீட்டு கொள்கைகள் மாறுபடாது அதன் வடிவிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவையான சந்தர்ப்பங்களில் முன்னைய ஆண்டுகளின் பெறுமதி மற்றும் குறிப்புக்கள் மீள் தயாரிப்பு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தினால் முன்னைய ஆண்டுகளின் பிழை திருத்தப்பட்டு சரி செய்யப்பட்ட நடைமுறையாண்டின் நிதிகூற்று மீள் வெளியிடப்பட்டது.

## 3. சிறப்பான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

கீழ் தரப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளில் அனைத்து காலகட்டத்துக்கும் உரிய அடிப்படையிலும் தொடர்ச்சியாக கூட்டுத்தாபனத்தினால் நிதிக்கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ளது.

### 3.1 சொத்து, பொறி மற்றும் இயந்திரங்கள்

சொத்து, பொறி மற்றும் இயந்திரங்கள் தேய்மான சேர்க்கப்பட்ட தேறிய கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் இன்னும் பாவனையில் உள்ளன.

கீழ் தரப்பட்ட திகதிகளில் மதிப்பீட்டு திணைக்களத்தினால் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| காணி மற்றும் அலுவலக | - 02.01.2017 இருந்து 06.01.2017 வரை |
| உபகரணம்<br>தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்<br>கணனி உதிரிப்பாகங்கள் | - 02.01.2017 இருந்து 30.01.2017 வரை |
| இயந்திராதிகள் | - 16.01.2017 இருந்து 30.01.2017 வரை |
| மோட்டார் போக்குவரத்து | - 13.01.2016 இருந்து 14.01.2016 வரை |

சொத்துக்கள் மீள் கணக்கீட்டின் வேறுபாடு மற்றும் இலாபம் வருமானத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளதுடன் உரிமை வேறுபட்ட கூற்றுக்களின் மீள்கணக்கீட்டு அடிப்படையில் இலாபம் மீள் கணக்கீட்டில் காட்டப்பட்டுள்ளது.

சொத்து மீள் கணக்கீட்டின் பின் அலுவலக உபகரணம் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துதல் ஒரு தரப்படுத்தலிலும் உபகரணங்கள் (tools) மற்றும் கை தள்ளு வண்டி இன்னுமொரு தரத்திலும் பிரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

#### 3.1.1 தேய்மானம்

மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து, பொறிகள் மற்றும் இயந்திரங்களின் பயன்தகு ஆயுட்காலம் மீது நேரடி தேய்மான அடிப்படையில் தேய்மானம் கணக்கிடப்படும்.

நிகழ் மற்றும் ஒப்பீட்டு ஆண்டுகளுக்கான மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 40 வருடங்கள் |
| பொறிகளும் இயந்திரங்களும் | 13.33 வருடங்கள் |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் | 04 வருடங்கள் |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 10 வருடங்கள் |
| அலுவலக தளபாடங்கள் | 10 வருடங்கள் |
| கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 03 வருடங்கள் |

### 3.2 பொருட் பட்டியல்

பொருட்பட்டியலானது குறைந்த கிரயம் மற்றும் தேறிய அட்டுறு பெறுமதியில் கணிப்பிடப்பட்டுள்ளது.

### 3.3 வரிவிதிப்பு

#### 3.3.1 வரி

நடப்பு ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுடனான ஒப்பீட்டு வருமான வரி செலுத்தல் மற்றும் சொத்து தேசிய வருமான ஆணையாளர் இற்கு சொலுத்துவதற்கு மற்றும் பெற்றுக் கொள்ளலுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வருமான வரி கணக்கீடு செய்யும் போது நிதி கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அங்கிகாரமளிக்கபட்ட வரி வீதம் மற்றும் அன்றைய தின சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செயற்படுத்தப்படும். வருமான வரி வேறுபடுத்தப்படும் போது நிதிகூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம் மற்றும் செலவு வரவு செலவு அடிப்படையில் 2006 வருடத்தில் தேசிய வருமான ஆண்டறிக்கையின் 10 ஆவது பிரிவின் அடிப்படையில் மற்றும் அதன் பின் மேற்கொண்ட திருத்தங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 3.4 காசும் காசுக்கு சமமானவைகளும்

கையிருப்பிலுள்ள காசு நடைமுறைக் காசு மற்றும் வங்கியிலுள்ள காசு, காசு மற்றும் காசுக்கு சமனானவைகளும் குறிக்கப்படும். நிதி அமைப்பு கூற்றில் வங்கி பற்று மற்றும் வங்கி மீதிக்கு அதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் காசு மற்றும் காசுக்கு சமனானவையாக கருதப்படும். காசு மற்றும் காசுக்கு சமனானவைகள் குறுகிய கால பணத்தேவை மற்றும் வேறு கொடுக்கல் வாங்கல்களுக்கு அதிக திரவத்தன்மையுடையதாக கருதப்படும்.

# 4. நிதி கருவிகள் - ஆரம்ப அங்கீகாரம் மற்றும் தொடர்ச்சியான அளவீடு

## 4.1 நிதிச் சொத்துக்கள்

### 4.1.1 வியாபார கடன்பட்டோர்

வியாபார கடன்பட்டோர் சாதாரண பெறுமதியில் நிதிக்கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

## 4.2 நிதி பொறுப்புக்கள்

### 4.2.1 சொத்துக்கள் ஈடு வைத்தல்

சகல வங்கி வசதிகள், வங்கி மிகைப்பற்று, குறுகிய கால கடன், நீண்ட கால கடன், கடன்பொறுப்பு, வங்கி பிணையாட்களுக்காக மக்கள் வங்கி இலக்கம் MB - 979/3063/3243/1147/422/5789 அதற்குரிய கூட்டுத்தாபன காணி கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் ஈடுவைத்துள்ளது.

இதற்கு மேலாக திறைசேரி பிணையாளர் ஒருவர் 2017. 09. 07 ஆம் திகதி இலக்கம் : TO/REV/TG/522 கீழ் கீழுள்ள வேலைத்திட்டத்துக்காக மக்கள் வங்கியின் மூலம் கடன் வசதி பெற்றுக் கொள்ளப்பட்டது.

| வேலைத்திட்டத்தின் பெயர் | பாதுகாப்பு நிதி (ரூ) | முடிவுத் திகதி |
|---|---|---|
| வங்கி மிகைப்பற்று, கடன் பொறுப்பு மற்றும் பொறுப்பு வசதிகளுக்காக | 1,165,000,000.00 | 15.09.2021 |
| திருத்த வேலை மற்றும் செயற்பாட்டு அபிவிருத்திக்காக நிதி ஒதுக்குதல் | 185,000,000.00 | 15.09.2023 |

### 4.2.2 ஐயப்பாட்டு பொறுப்பு

அனைத்து மூலதனம் பகிர்வு மற்றும் ஐயப்பாட்டு நிதி கூற்றுக்களில் தேவையான சரிபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் மூலம் அச்சிடப்படுகின்ற பாடசாலை பாடநூல்கள், அறநெறி பாடசாலை பாடநூல்கள், மற்றும் லொத்தர் சீட்டு அச்சிடல் மற்றும் பகிர்வு கல்வி வெளியீட்டுத் திணைக்களம், பௌத்த விவகார திணைக்களம் மற்றும் தேசிய லொத்தர் சபைக்கு வங்கி உத்தரவாதம் மற்றும் முற்பணம் செலுத்தல் சமர்ப்பிக்கப்பட்டது. ஐயப்பாட்டு பொறுப்பு மொத்த தொகை 145,307,924 ஆவதுடன் 2018.12.31 திகதிக்கு திறக்கப்பட்டுள்ள கடன் உத்தரவாத பெறுமதி 56,937,201 ஆகும்.

### 4.3.1 கையிருப்பு

கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப மூலதனம், பொதுவான கையிருப்பு மற்றும் அபிவிருத்தி கையிருப்பு உள்ளடங்கலாக அரசாங்கத்தின் ஒன்றிணைக்கப்பட்ட நிதியிலிருந்து உதவி வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஆரம்ப கையிருப்பு | ரூபா | 102,490.50 |
| அபிவிருத்தி கையிருப்பு | ரூபா | 13,901,142.23 |
| பொது கையிருப்பு | ரூபா | 1,000,000.00 |
| | ரூபா | **15,003,632.73** |

கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்று வரை நிலையான மூலதனத்தில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை.

### 4.3.2 மீள்மதிப்பீடு இருப்பு

இந்த இருப்புக்கு 2016 ஆண்டில் மோட்டார் வாகனம் மீள்மதிப்பீடு செய்வதில் பெற்றுக் கொண்ட இலாபம் மற்றும் கீழ்தரப்பட்டுள்ள படி உபகரணங்கள் மற்றும் மீள்மதிப்பீடு செய்த இலாபங்கள் உட்படுத்தப்பட்டுள்ளன.

| | 2016 (ரூ.) | 2017/18 (ரூ.) |
|---|---|---|
| மோட்டார் வாகனம் மற்றும் வேறு வாகனங்கள் | 36,015,363 | |
| சொத்துக்கள் | | 377,290,608 |
| கட்டிடங்கள் | | 158,049,568 |
| பொறிகளும் இயந்திரங்களும் | | 246,979,194 |
| காரியாலய உபகரணங்கள் | | (8,785,874) |
| கணணி மற்றும் உதிரிப்பாகங்கள் | | (1,537,152) |
| | **36,015,363** | **771,996,344** |

## 5. ஓய்வு பயன் பொறுப்புறுதிகள்

### 5.1 ஓய்வு பயன் பொறுப்புறுதிகள்

1983 இல 12 ஒய்வு பயன் பொறுப்புறுதிகள் சுற்று நிருபனத்தின் கீழ் ஓய்வு பயன் பொறுப்புறுதிகள் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனம் பொறுப்புடையதாகும் இதுவரைக்கும் உரிய நேரத்தில் இதனை செலுத்தியுள்ளதுடன் 2018.12.31 திகக்கு ஓய்வு பயன் பொறுப்பு ஒதுக்கப்படுவதற்கு இது தொடர்பான நிதி அமைப்பொன்று காணப்படவில்லை.

### 5.2 ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி

ஊ. சே. நி. மற்றும் ஊ. ந. நி யின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக சேவை வழங்குனர் உரிய நிதிக்கு 12% மற்றும் 3% என்று அடிப்படையில் அடிப்படை சம்பளத்தை கருத்திற் கொண்டு செலுத்தல் வேண்டும்.

## 6. வருமானமும் செலவினங்களும்

### 6.1 வருமான இனங்காணல்

சகல வருமானமும் தொன்மை கிரய அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

**வட்டி வருமானம்**

கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு 10% வட்டி அறவிடப்பட்டுள்ளது.

### 6.2 செலவுகளை இணங்காணல்

**வரவு செலவு**

கூட்டுத்தாபனத்தை நடத்திச் செல்வதற்கு சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் செயற் திறன்பிக்கதாக பநாமரிப்பு செய்வதற்கான அளைத்து செலவினங்கள் வருடத்தினுள் வருமானத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**மூலதனச் செலவு**

கூட்டுத்தாபத்திள் சொத்து மற்றும் உபகரணங்கள் வருமான அளைவ விருத்தி செய்வது மற்றும் முன்ளோக்கி கொண்டு செல்வதற்காக கொத்துக்களை கைப்பற்றிக் கொள்ளல் மற்றுமு் நீடித்தல் மற்றும்.

### 6.3 கடன் பெறுவதற்கான கிரயம்

ஏற்கப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட சகல கடன் பெறுவதற்கான கிரயங்களும் செலவினங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் போன்றவற்றை செயற்படுத்துவதற்குரியதும், இதற்குரிய வட்டி செலவினங்களையும் மதிப்பிட்டுள்ளது.

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | குறிப்பு | 2018 ரூ. | மீள் குறிப்பிடப்பட்ட கணக்குகள் 2017 ரூ. | 2017 ரூ. |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | | |
| சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் | 15 | 1,039,094,309 | 1,093,382,089 | 993,178,105 |
| | | **1,039,094,309** | **1,093,382,089** | **993,178,105** |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | | |
| பொருட்பட்டியல்கள் | 16 | 438,499,410 | 252,711,676 | 252,711,676 |
| வியாபார வருமதிகள் | 17 | 299,687,983 | 518,469,708 | 527,327,575 |
| ஏனைய வருமதிகள் | 18 | 46,143,558 | 47,308,810 | 47,308,810 |
| முற்பண கொடுப்பனவு | | 235,476 | 1,673,445 | 1,673,445 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 19 | 29,506,231 | 52,015,886 | 51,857,886 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | **814,072,659** | **872,179,525** | **880,879,392** |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,853,166,967** | **1,965,561,613** | **1,874,057,497** |
| **ஒப்புரவுகளும் பொறுப்புக்களும்** | | | | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | | 15,000,000 | 15,000,000 | 15,000,000 |
| ஒதுக்கங்கள் | | 15,003,633 | 15,003,633 | 15,003,633 |
| இருப்பு வருமானங்கள் | | (446,833,123) | (44,752,462) | (30,931,579) |
| மொத்த ஒப்புரவுகள் | | 808,011,707 | 808,012,812 | 701,192,812 |
| | | **391,182,216** | **793,263,983** | **700,264,866** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | | |
| Bank Loan - Long Term | 20 | 174,000,236 | - | - |
| ஓய்வு பயன் பொறுப்புறுதிகள் | | 215,155,555 | 188,712,450 | 188,712,450 |
| வேறுபட்ட வரி பொறுப்புக்கள் | 21 | (11,566,933) | (11,268,578) | (11,268,578) |
| மொத்த - நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | | **377,588,858** | **177,443,872** | **177,443,872** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| வியாபார சென்மதிகள் | 22 | 174,435,807 | 170,035,729 | 171,530,729 |
| ஏனைய சென்மதிகள் | 23 | 46,319,872 | 42,641,788 | 42,641,788 |
| குறுகிய கால கடன் பெறுவனவுகளுக்கான வட்டி | 24 | 817,625,781 | 745,962,105 | 745,962,105 |
| வங்கி மேலதிகப் பற்று | | 46,014,433 | 36,214,137 | 36,214,137 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **1,084,395,893** | **994,853,759** | **996,348,759** |
| **மொத்த ஒப்பரவுகளும் பொறுப்புக்களும்** | | **1,853,166,967** | **1,965,561,614** | **1,874,057,497** |

இந்நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் தேவைகளுக்கு இணைவாக உள்ளதென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

..............................

என். டி. பிரியன்கர குமார
நிதி முகாமையாளர்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பேற்க வேண்டும். இந்நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ளன. பக்கம் 67, 68, 69 ஆகியவற்றிலுள்ள நிதிக் கொள்கைகள், பக்கம் 71, 72 மற்றும் 76 தொடக்கம் 78 வரையிலான படிவங்கள் நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைந்த பகுதியாக காட்டப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| .............................. | .............................. | .............................. |
| **எச். ஹேவகே** | **எச். எம். மஹிந்த புஷ்பகுமார** | **ரோஹண சமிந்த ரத்நாயக்க** |
| **தவிசாளர்/பணிப்பாளர்** | **வேலை பணிப்பாளர்** | **பணிப்பாளர்** |

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | | மீள் குறிப்பிடப்பட்ட கணக்குகள் | |
|---|---|---|---|
| | **2018** | **2017** | **2017** |
| | **ரூ.** | **ரூ.** | **ரூ.** |
| **16. பொருட்பட்டியல்கள்** | | | |
| மூலப்பொருட்கள் | 203,092,192 | 126,647,717 | 126,647,717 |
| பாவனைப்பொருட்கள் | 10,278,420 | 10,702,665 | 10,702,665 |
| உதிரிப்பாகங்கள் | 37,367,250 | 36,540,074 | 36,540,074 |
| கட்டுமானப்பொருட்கள் | 1,202,906 | 1,447,563 | 1,447,563 |
| முடிவுப்பொருட்கள் | 107,217,687 | 51,557,429 | 51,557,429 |
| உற்பத்தியாகும் பொருட்கள் | 79,340,955 | 25,816,228 | 25,816,228 |
| | **438,499,410** | **252,711,676** | **252,711,676** |
| **17. வியாபார பெறுவனவுகள்** | | | |
| வியாபார கடன்படுநர் | 326,778,134 | 548,474,498 | 557,332,365 |
| கழிக்க – அறிவிட முடியாக்கடன் ஏற்பாடு | (27,451,460) | (23,984,510) | (23,984,510) |
| EPD தரம் குறைவு தண்டம் | - | (6,381,589) | (6,381,589) |
| ஏற்பாட்டுக்காக ஏனைய கடன்கொடுநர் | 361,309 | 361,309 | 361,309 |
| | **299,687,983** | **518,469,708** | **527,327,575** |
| **18. ஏனைய பெறுவனவுகள்** | | | |
| பணியாட்தொகுதி கடன் மற்றும் முற்பணம் (குறிப்பு 18.1) | 12,969,692 | 19,503,611 | 19,503,611 |
| வைப்புக்கள் மற்றும் பெறுவனவுகள் (குறிப்பு 18.2) | 14,613,129 | 5,729,546 | 5,729,546 |
| விற்பனை கட்டுப்பாட்டு கணக்குகள் | (2,157,001.08) | - | - |
| வங்கி கடன் - தொங்கல் கணக்கு | 12,377,566 | 3,409,883 | 3,409,883 |
| பெற்றுக்கொள்ளக் கூடிய வரி (VAT முன்.கொ.செ) | 8,340,172 | 18,665,770 | 18,665,770 |
| | **46,143,558** | **47,308,810** | **47,308,810** |
| **18.1 பணியாட்தொகுதி கடன் மற்றும் முற்பணம்** | | | |
| இடர் கடன்கள் | 9,788,758 | 15,795,710 | 15,795,710 |
| பண்டிகை முற்பணம் | 2,378,000 | 2,728,000 | 2,728,000 |
| பணியாட்தொகுதி சம்பள முற்பணம் | 6,000 | 31,746 | 31,746 |
| கடன்கொடுநர் முற்பண கணக்கு | 796,934 | 948,155 | 948,155 |
| | **12,969,692** | **19,503,611** | **19,503,611** |
| **18.2 வைப்புக்களும் பெறுவனவுகளும்** | | | |
| வைப்புக்கள் பெறுவனவுகள் | 14,099,073 | 5,202,903 | 5,202,903 |
| சேர்க்க. ஏனைய பெறுவனவுகள் | 514,056 | 526,643 | 526,643 |
| | **14,613,129** | **5,729,546** | **5,729,546** |
| **18.3 விற்பனை கட்டுப்பாட்டு கணக்கு** | | | |
| விற்பனை கட்டுப்பாட்டு கணக்கு | (2,157,001) | - | - |
| | (2,157,001) | - | - |
| **19. காசும் காசுக்கு சமமானவைகளும்** | | | |
| வங்கியிலுள்ள காசு | 27,553,571 | 48,037,960 | 47,879,960 |
| வழியிடைப்பணம் | 1,893,709 | 3,849,626 | 3,849,626 |
| கையிலுள்ள காசு | 58,950 | 128,300 | 128,300 |
| | **29,506,231** | **52,015,886** | **51,857,886** |

காசுப்பாய்ச்சல், காசும் காசுக்கு சமமானவைகள் கூற்றின் பயன்பாட்டிற்காக பின்வருவன உள்ளடக்கப்படுகின்றன.

| | | மீள் குறிப்பிடப்பட்ட கணக்குகள் | |
|---|---|---|---|
| | 2018 | 2017 | 2017 |
| | ரூ. | ரூ. | ரூ. |
| வங்கியிலுள்ள காசு | 27,553,571 | 48,037,960 | 47,879,960 |
| வழியிடைப்பணம் | 1,893,709 | 3,849,626 | 3,849,626 |
| கையிலுள்ள காசு | 58,950 | 128,300 | 128,300 |
| | **29,506,231** | **52,015,886** | **51,857,886** |
| வங்கி மேலதிகப்பற்று | (46,014,433) | (36,214,137) | (36,214,137) |
| | **(16,508,202)** | **15,801,749** | **15,643,749** |
| 20. **வங்கிக் கடன்ட நீண்ட காலம்** | | | |
| 2018.07.01 திகதிக்கு ஆரம்ப நிலுவை | 185,000,000 | - | - |
| வருடத்தினுள் கடளுக்கான செலுத்தல்கள் | | - | - |
| வருட முடிவில் மிகுதி | **174,000,236** | - | - |
| **21. வேறுபட்ட வரி பொறுப்புக்கள்** | | | |
| வருட ஆரம்ப திகதிக்கு | (11,268,578) | - | - |
| வருடத்தினுல் ஆரம்பிக்கப்பட்ட/ தற்காலிக மாற்றங்கள் | (298,355) | (11,268,578) | (11,268,578) |
| வருட முடிவுத் திகதிக்கு | **(11,566,933)** | **(11,268,578)** | **(11,268,578)** |
| **22. வியாபார கொடுப்பனவுகள்** | | | |
| வியாபார கடன் கொடுநர் | 42,230,180 | 52,410,998 | 53,905,998 |
| கடன்கொடுநர் முற்பண கணக்கு | 1,510,615 | 1,440,310 | 1,440,310 |
| ஏனைய கடன்கொடுநர் | 129,399,160 | 114,565,198 | 114,565,198 |
| உந்நாட்டு இறைவரித்திணைக்களம் | 16,194 | 9,065 | 9,065 |
| வேறு கடன்பட்டோர் (கடன் மீதி) | 1,279,659 | 1,610,158 | 1,610,158 |
| | **174,435,807** | **170,035,729** | **171,530,729** |
| **23. ஏனைய கொடுப்பனவுகள்** | | | |
| திரண்ட செலவு | 44,848,338 | 41,193,629 | 41,193,629 |
| வைப்பு கொடுப்பனவு | 1,471,534 | 1,448,159 | 1,448,159 |
| | **46,319,872** | **42,641,788** | **42,641,788** |
| **24. குறுகிய காலக் கடன்** | | | |
| நீண்ட காலக் கடன் | 770,860,679 | 697,050,043 | 697,050,043 |
| கடன் உத்தரவாதக் கடிதம் | 46,765,102 | 48,912,062 | 48,912,062 |
| | **817,625,781** | **745,962,105** | **745,962,105** |

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# 2018ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | | மீள் குறிப்பிடப்பட்ட கணக்குகள் | |
|---|---|---|---|
| | 2018 | 2017 | 2017 |
| | ரூ. | ரூ. | ரூ. |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினால் காசுப்பாய்ச்சல்** | **(406,985,154)** | **(243,094,835)** | **(229,273,949)** |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம்/நட்டம் | | | |
| செம்மையாக்கலுக்காக: | | | |
| நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம் | 61,107,084 | 45,492,354 | 38,876,337 |
| முந்திய வருட செம்மையாக்கல் | - | (1,438,238) | (1,438,238) |
| நிதிச் செலவினங்கள் | - | 3,010,982 | 3,010,982 |
| வருடம் முழுவதும் பணிக்கொடை ஏற்பாடு | 110,486,874 | 95,754,406 | 95,754,406 |
| | 47,483,284 | 12,861,970 | 12,861,970 |
| கல்வி வெளியீட்டு திணைக்களத்து தாமதப் பணம் ஒதுக்குதல் | - | 6,381,589 | 6,381,589 |
| கைவிடப்பட்ட கடன் | 3,466,949 | (804,035) | (804,035) |
| **தொழிற்படு மூலதன மாற்றத்துக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்** | **(184,440,963)** | **(81,835,807)** | **(74,630,938)** |
| **தொழிற்படு மூலதன விடயங்களின் மாற்றம்** | | | |
| (அதிகரிப்பு) பொருட் பட்டியல்களில் குறைப்பு | (185,787,734) | (29,399,147) | (27,904,147) |
| (அதிகரிப்பு) வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகளின் குறைப்பு | 221,696,364 | 151,785,330 | 142,827,463 |
| (அதிகரிப்பு)/ஏனைய பெறுவனவுகளின் குறைப்பு | 1,165,252 | 165,380,653 | 165,380,653 |
| அதிகரிப்பு/நடைமுறை பொறுப்புக்களின் (குறைப்பு) | 8,037,930 | (13,627,719) | (13,527,720) |
| **செயற்பாடுகளின் மூலம் ஈட்டப்பட்ட காசு** | **(139,329,152)** | **192,303,310** | **192,145,310** |
| செலுத்திய வரி | (298,355) | (36,191,121) | (36,191,121) |
| செலுத்திய ஊழியர் ஓய்வு கொடை | (21,040,179) | (9,346,132) | (9,346,132) |
| **செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள்** | **(160,667,686)** | **146,766,057** | **146,608,057** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள்** பிபிஈ கொள்வனவு | | | |
| முதலீட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல்கள் | - | 1,445,242 | 1,445,242 |
| நிதிச் செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள் | (6,819,302) | (217,604,067) | (217,604,067) |
| | **(6,819,302)** | **(216,158,825)** | **(216,158,825)** |
| கடன்பெறுவனவுகளுக்கான பெறுவனவுகள்/செலுத்துகை | | | |
| நிதி நடவடிக்கைளில் பணப் பாய்ச்சல் | 245,663,912 | 176,610,759 | 176,610,759 |
| வட்டி சொலுத்தல் | (110,486,874) | (95,754,406) | (95,754,406) |
| **முதலீட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | **135,177,038** | **80,856,353** | **80,856,353** |
| **காசும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு (குறைப்பு)** | (32,309,951) | 11,463,585 | 11,305,585 |
| **தவணை ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகள்** | 15,801,749 | 4,338,164 | 4,338,164 |
| **தவணை இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகள் (குறிப்பு 19)** | **(16,508,202)** | **15,801,749** | **15,643,749** |

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2018ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | வெளியிட்ட மூலதனம் ரூ. | மூலதன ஒதுக்கம் ரூ. | பொது ஒதுக்கம் ரூ. | அபிவிருத்தி ஒதுக்கம் ரூ. | மறு மதிப்பிட்டு ஒதுக்கம் ரூ. | இருப்பு வருமானம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 **கணக்கீடு** | | | | | | | |
| **2017 ஜனவரி 01 உள்ளவாறு மீதி** | 15,000,000 | 102,491 | 1,000,000 | 13,901,142 | 36,015,363 | 195,331,388 | **261,350,384** |
| முந்திய வருட செம்மையாக்கல் | | | | | | 3,010,982 | **3,010,982** |
| ஆண்டுக்குரிய இலாபம் / நட்டம் (after taxation) | | | | | | (229,273,949) | **(229,273,949)** |
| **மறுமதிப்பீட்டு இலாபம்** | | | | | **665,177,449** | | **665,177,4** |
| **2017 டிசம்பர் 31 உள்ளவாறு மீதி** | **15,000,000** | **102,491** | **1,000,000** | **13,901,142** | **701,192,812** | **(30,931,579)** | **700,264,866** |
| **மீள்குறிப்பிடப்பட்ட கணக்குகள்** 2017 | | | | | | | |
| **2017 ஜனவரி 01 உள்ளவாறு மீதி** | 15,000,000 | 102,491 | 1,000,000 | 13,901,142 | 36,015,363 | 195,331,388 | **261,350,383** |
| முந்திய வருட செம்மையாக்கல் | | | | | | 3,010,982 | **3,010,982** |
| ஆண்டுக்குரிய இலாபம் / நட்டம் (after taxation) | | | | | | (243,094,833) | **(243,094,833)** |
| **மறுமதிப்பீட்டு இலாபம்** | | | | | 771,997,449 | | **771,997,449** |
| **2017 டிசம்பர் 31 உள்ளவாறு மீதி** | **15,000,000** | **102,491** | **1,000,000** | **13,901,142** | **808,012,812** | **(44,752,462)** | **793,263,982** |
| 2017 **கணக்கீடு** | | | | | | | |
| **2018 ஜனவரி 01 உள்ளவாறு மீதி** | 15,000,000 | 102,491 | 1,000,000 | 13,901,142 | 808,012,812 | (44,752,462) | **793,263,982** |
| முந்திய வருட செம்மையாக்கல் | | | | | | 4,904,493 | **4,904,493** |
| ஆண்டுக்குரிய இலாபம் / நட்டம் (after taxation) | | | | | | (406,985,154) | **(406,985,154)** |
| **மறுமதிப்பீட்டு இலாபம்** | | | | | (1,105) | | **(1,105)** |
| **2018 டிசம்பர் 31 உள்ளவாறு மீதி** | **15,000,000** | **102,491** | **1,000,000** | **13,901,142** | **808,011,707** | **(446,833,123)** | **391,182,216** |

## 2018ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான விரிவான வருமானக் கூற்றுக்கள்

| | | | மீள் குறிப்பிடப்பட்ட கணக்குகள் | |
|---|---|---|---|---|
| | குறிப்புக்கள் | 2018<br>ரூ. | 2017<br>ரூ. | 2017<br>ரூ. |
| வருமானம் | 7 | 901,053,747 | 1,240,981,165 | 1,249,839,033 |
| விற்பனை செலவு | 8 | (903,841,823) | (1,060,576,699) | (1,054,060,200) |
| மொத்த இலாபம் | | **(2,788,076)** | **180,404,466** | **195,778,833** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 9 | 17,870,270 | 20,796,639 | 20,796,639 |
| விநியோக செலவினம் | 10 | (16,787,874) | (14,788,906) | (14,788,906) |
| நிர்வாக செலவினம் | 11 | (234,414,704) | (213,182,504) | (214,735,986) |
| ஏனைய செயற்பாட்டு செலவினம் | 12 | (62,818,995) | (122,949,949) | (122,949,949) |
| செயற்பாட்டு இலாபம் | | (298,939,379) | (149,720,253) | (135,899,369) |
| நிதி வருமானம் | | 2,441,100 | 2,379,826 | 2,379,826 |
| நிதி செலவினம் | 13 | (110,486,874) | (95,754,406) | (95,754,406) |
| வரிக்கு முந்திய இலாபம் | | **(406,985,154)** | **(243,094,833)** | **(229,273,949)** |
| வருமான வரி | 14 | - | - | - |
| வரிக்கு பிந்திய இலாபம் | | **(406,985,154)** | **(243,094,833)** | **(229,273,949)** |

## 2018ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்றுக்கள்

| | | மீள் குறிப்பிடப்பட்ட கணக்குகள் | |
|---|---|---|---|
| | 2018<br>ரூ. | 2017<br>ரூ. | 2017<br>ரூ. |
| ஆண்டுக்குரிய இலாபம் (வரிக்கு பின்) | **(406,985,154)** | **(243,094,833)** | **(229,273,949)** |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | - |
| மறு மதிப்பீட்டு இலாபம் | (1,105) | 771,997,449 | 665,177,449 |
| ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம் | **(406,986,259)** | **528,902,616** | **435,903,500** |

## 2018ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | | மீள் குறிப்பிடப்பட்ட கணக்குகள் | |
|---|---|---|---|
| | **2018** | **2017** | **2017** |
| | **ரூ.** | **ரூ.** | **ரூ.** |
| **07. வருமானம்** | | | |
| காகிதாதிகள் தொழிற்சாலையின் வருமானம் | 221,627,632 | 211,478,267 | 220,336,135 |
| பிரதான அச்சக வருமானம் | | | |
| பாடப்புத்தகங்கள் | 289,029,668 | 677,043,029 | 677,043,029 |
| தொழில்கள் | 360,241,485 | 317,971,906 | 317,971,907 |
| வெளியீடு | 4,786,835 | 2,397,001 | 2,397,001 |
| ஏனைய விற்பனை வருமானம் | 25,368,128 | 32,090,961 | 32,090,961 |
| | **901,053,747** | **1,240,981,165** | **1,249,839,033** |
| **08. விற்பனைச் செலவு** | | | |
| பிரதான அச்சகம் | | | |
| உபயோகித்த மூலப்பொருள் | 407,630,135 | 423,890,328 | 423,890,328 |
| நேரடி உழைப்பு | 187,570,249 | 221,253,402 | 221,253,402 |
| நேரடி தொழிற்சாலை செலவு | 36,149,507 | 48,885,456 | 50,380,456 |
| ஏனைய தொழிற்சாலை செலவு | 91,829,708 | 87,763,170 | 79,751,670 |
| ஏனைய செலவுகள் | (74,060,062) | 36,037,689 | 36,037,689 |
| தாமதக் கட்டணம் (தண்உப்பணம்) (க.வெ.தி) | 38,262,345 | 1,958,500 | 1,958,500 |
| தமைதக் கட்டணம் (தணடப்பணம்) (தே.லொ.ச.) | 10,181,000 | - | - |
| (க.வெ.தி.) தாமதக் கட்டணம் ஒதுக்குதல் | - | 6,381,589 | 6,381,589 |
| காலம் கடந்த பணக்கொடுப்பனவு மற்றும் தண்டம் | **697,562,880** | **826,170,134** | **819,653,634** |
| **காகிதாதி தொழிற்சாலை** | | | |
| உபயோகித்த மூலப்பொருள் | 129,481,819 | 165,056,830 | 165,056,830 |
| நேரடி உழைப்பு | 29,708,956 | 32,853,408 | 32,853,408 |
| நேரடி தொழிற்சாலை செலவு | 3,277,672 | 2,972,534 | 2,972,534 |
| ஏனைய தொழிற்சாலை செலவு | 8,710,140 | 8,824,840 | 8,824,840 |
| ஏனைய செலவுகள் | 9,533,639 | (7,838,665) | (7,838,664) |
| | **180,712,225** | **201,868,946** | **201,868,948** |
| வெளியீட்டு பகுதியின் செலவு | **4,237,183** | **2,992,756** | **2,992,756** |
| ஏனைய பகுதிகளின் செலவுகள் | **21,329,535** | **29,544,862** | **29,544,862** |
| மொத்த விற்பனைச் செலவு | **903,841,823** | **1,060,576,699** | **1,054,060,200** |
| **09. ஏனைய பராமரிப்பு வருமானம்** | | | |
| ஏனைய வருமானங்கள் | 17,463,220 | 17,948,931 | 17,948,931 |
| கேள்விப்பத்திர வைப்பு | 387,850 | 605,435 | 605,435 |
| அறவிடமுடியா கடன் ஒதுக்கம் | - | 804,035 | 804,035 |
| விற்பனை இலாபம் | - | 1,438,238 | 1,438,238 |
| சிற்றுண்டிச்சாலை மூலம் கிடைத்த இலாபம் | 19,200 | - | - |
| | **17,870,270** | **20,796,639** | **20,796,639** |

| | 2018 | மீள் குறிப்பிடப்பட்ட கணக்குகள் 2017 | 2017 |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| **10. விநியோகச் செலவு** | | | |
| தேசிய கட்டிட வரி | 7,364,166 | 8,390,599 | 8,390,599 |
| மோட்டார் வாகன பராமரிப்புச் செலவு | 5,027,606 | 4,960,616 | 4,960,616 |
| விளம்பரம் | 254,648 | 289,626 | 289,626 |
| விற்பனை மேம்படுத்தல் | 391,585 | 471,083 | 471,083 |
| அறவிட முடியாக்கடன் ஏற்பாடு | 3,466,949.24 | - | - |
| விற்பனைக் கூடம் பராமரிப்பு | 2,350 | 7,200 | 7,200 |
| தீக் காப்புறுதி - விற்பனைக் கூடம் | 60,007 | - | - |
| கடன் அறவிடல் கொமிஸ் | - | - | - |
| விற்பனை கழிவு | - | 566,491 | 566,491 |
| போக்குவரத்துச் செலவு முடிவுப் பொருளுக்கு | 10,750 | 103,291 | 103,291 |
| மீள் செலுத்தப் படாத டென்டர் வைப்பு | 209,813 | - | - |
| | **16,787,874** | **14,788,906** | **14,788,906** |
| **11. நிர்வாக செலவினங்கள்** | | | |
| வாடகை | 3,482,711 | 2,907,278 | 2,907,278 |
| காணி, கட்டிட நிர்வாகம் | 576,623 | 2,085,568 | 2,085,568 |
| மின்சாரம் | 178,561 | 266,216 | 266,216 |
| அலுவலக தளபாட பராமரிப்பு | 395,530 | 1,260,208 | 1,260,208 |
| தேய்மானம் - அலுவலக தளபாடம் | 1,043,964 | 676,348 | 676,348 |
| தளபாடமும் பொருத்துகைகளும் | - | - | - |
| கணினி மென்பொருள் | 1,921,470 | 1,715,910 | 3,111,393 |
| மோட்டார் சைக்கிள்கள் | 64,375 | 66,375 | 66,375 |
| வரிப்பணம் | 41,487 | 70,008 | 70,008 |
| நீர் கட்டணம் | 67,813 | 81,858 | 81,858 |
| சம்பளங்களும் படிகளும் | 129,973,241 | 135,659,728 | 135,659,728 |
| ஊழியர் மேலதிக நேரம் | 9,824,898 | 11,267,951 | 11,267,951 |
| ஊழியர் சேமலாப நிதி | 16,507,035 | 17,393,133 | 17,393,133 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 4,127,500 | 4,348,285 | 4,348,285 |
| ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 2,115,250 | 2,371,000 | 2,371,000 |
| தவிசாளர் ஊதியம் | 598,771 | 927,374 | 927,374 |
| பணிப்பாளர் ஊதியம் | 569,869 | 780,000 | 780,000 |
| பணிப்பாளர் சபை கட்டணங்கள் | 453,500 | 374,500 | 374,500 |
| தபால் செலவு | 255,824 | 233,567 | 233,567 |
| தொலைபேசி | 1,580,108 | 1,680,641 | 1,680,641 |
| அறிவித்தல் மற்றும் வெளியீடுகளை அச்சிடல் | 1,972,015 | 5,047,569 | 5,047,569 |
| பத்திரிகை விளம்பரம் மற்றும் வெளியீடுகள் | 504,385 | 806,270 | 806,270 |
| போக்குவரத்து | 1,191,440 | 1,428,331 | 1,428,331 |
| பத்திரிகை மற்றும் சஞ்சிகைகள் | 270,270 | 101,800 | 101,800 |
| மோட்டார் வாகன கூலி | - | 4,235 | 4,235 |
| வெளிநாட்டு சுற்றுப்பயணம்/ஊழியர் பயிற்சி (வெளிநாட்டு) | - | 414,993 | 414,993 |
| இணையத்தளம்/மின்னஞ்சல் | 163,917 | 189,317 | 189,317 |
| பொது அலுவலக செலவினங்கள் | 500,000 | 500,000 | 500,000 |
| கணக்காய்வு கட்டணம் | 45,988 | 52,988 | 52,988 |
| இதர செலவினங்கள் | 18,136 | 174,000 | 174,000 |
| சட்ட மற்றும் ஆலோசனை சேவை | 377,176 | 515,320 | 515,320 |
| களியாட்டம் | 47,483,284 | 12,861,970 | 12,861,970 |
| பணிக்கொடை செலவினங்கள் | 328,000 | 434,300 | 592,300 |
| ஊழியர் பயிற்சி | 38,250 | 153,000 | 153,000 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கட்டணம் | 141,886 | 163,652 | 163,652 |
| கேள்வி பத்திர சபை தொழில்நுட்ப கட்டணங்கள் | 2,190,000 | 704,400 | 704,400 |
| மோட்டார் வாகன பராமரிப்பு 25% | 5,027,606 | 4,960,616 | 4,960,616 |

| | 2018 | மீள் குறிப்பிடப்பட்ட கணக்குகள் 2017 | 2017 |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| தங்குமிடம் | 48,430 | - | - |
| பணிப்பாளர் சபை கூட்ட செலவினங்கள் | 32,984 | 27,372 | 27,372 |
| உறுப்பினர் கட்டணங்கள் | 41,310 | 7,600 | 7,600 |
| நன்கொடை | 46,783 | 254,828 | 254,828 |
| கணினி பணியக சேவை கட்டணங்கள் | 144,550 | 167,340 | 167,340 |
| காசு போக்குவரத்துக் கட்டணங்கள் | - | 9,300 | 9,300 |
| காசு மெய்ப்பாதுகாவலர் கட்டணங்கள் | - | - | - |
| வினியோகத்தர் பதிவுக் கட்டணம் | 69,768 | 37,357 | 37,357 |
| | **234,414,704** | **213,182,504** | **214,735,986** |

**12. ஏனைய செயற்பாட்டு செலவினங்கள்**

| | | | |
|---|---|---|---|
| ஊழியர் சேமநலன் | 24,203,913 | 24,880,059 | 24,880,059 |
| ஊழியர் மருத்துவ திட்டம் | 10,046,219 | 10,612,238 | 10,612,238 |
| வீட்டுக்கடன் வட்டி | 2,573,035 | 3,113,525 | 3,113,525 |
| ஊழியர் வெகுமதி | 1,408,369 | 50,190,854 | 50,190,854 |
| விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு | - | 7,490,000 | 7,490,000 |
| ஊழியர் போக்குவரத்து | 10,879,168 | 11,012,114 | 11,012,114 |
| விடுமுறை கொடுப்பனவு | 13,615,290 | 15,607,159 | 15,607,159 |
| ஊழியர் விருதுகள் | 93,000 | 44,000 | 44,000 |
| செலுத்துனர் வரி | - | - | - |
| | **62,818,995** | **122,949,949** | **122,949,949** |

**13. வருமான செலவினங்கள்**

| | | | |
|---|---|---|---|
| வங்கி கட்டணங்கள் | 2,349,948 | 7,276,412 | 7,276,412 |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 5,347,406 | 6,462,707 | 6,462,707 |
| வங்கி கடன் வட்டி – குறுகிய காலம் | 88,917,227 | 82,015,287 | 82,015,287 |
| வங்கி கடன் வட்டி – நீண்ட காலம் | 13,872,293 | - | - |
| | **110,486,874** | **95,754,406** | **95,754,406** |

**14. வருமான வரி**

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுக்குரிய வருமான வரி ஏற்பாடு | - | - | - |
| | - | - | - |

## 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

15. சொத்து, தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள்

| விபரம் | 31. 12. 2016 உள்ளவாறு | மறுமதிப்பீடு 01. 01. 2017 | ஆண்டின் சேர்த்தல்கள் / மீள்பெறுமதியிடல்கள் | ஆண்டின் வெளியேற் றங்கள் | செலவு மறுமதிப்பீடு 31. 12. 2017 உள்ளவாறு | ஆண்டின் வெளியேற் றங்கள் | மறுமதிப்பீடு 01.01.2018 | சேர்த்தல் மீள்பெறுமதியிடல்கள் 2018 | 31. 12. 2018 உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கிரயத்தில்** | | | | | | | | | |
| காணி | 475,126 | 378,500,000 | | - | 378,500,000 | - | 378,500,000 | - | 378,500,000 |
| கட்டிடம் | 38,020,440 | 166,600,000 | | - | 166,600,000 | - | 166,600,000 | - | 166,600,000 |
| * தொழிற்சாலை மற்றும் இயந்திரங்கள் | 243,785,462 | 317,487,100 | 212,640,604 | - | 530,127,704 | - | 530,127,704 | 5,229,372 | 535,357,077 |
| * தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 2,368,661 | - | - | - | - | - | - | - | 0 |
| வாகனங்கள் | 55,571,000 | - | - | (8,000) | 55,563,000 | - | 55,563,000 | - | 55,563,000 |
| ** தொழிற்சாலை கருவிகள் வகைகள் | 35,577,032 | 5,879,200 | 3,449,693 | - | 9,328,893.26 | - | 9,328,893 | 1,504,940 | 10,833,834 |
| ** அலுவலக தளபாடங்கள் | 4,476,547 | - | - | - | - | - | - | - | 0 |
| கணினி, பாகங்கள் | 40,307,456 | 4,186,450 | 1,513,770 | - | 5,700,220 | - | 5,700,220 | 84,990 | 5,785,210 |
| இலத்திரனியல் மீள் உள்ளீடுகள் | 2,572,951 | - | - | - | 2,572,951 | - | 2,572,951 | - | 2,572,951 |
| **மொத்தம்** | **397,197,548** | **872,652,750** | **217,604,068** | **(8,000)** | **1,148,392,769** | **-** | **1,148,392,769** | **6,819,302** | **1,155,212,071** |
| **சேர்க்கப்பட்ட தேய்மானம்** | | | | | | | | | |
| விபரம் | **31.12.2016 உள்ளவாறு** | மறுமதிப்பீடு **01. 01. 2017** | தேய்மானம் **2017** | ஆண்டின் வெளியேற்றம் | சேர்க்கப்பட தேய்மானம் **31.12.2017** | ஆண்டின் வெளியேற்றம் | மறுமதிப்பீடு செலவு **01.01.2018** | ஆண்டின் தேய்மானம் **2018** | சேர்க்கப்பட்ட தேய்மானம் **31.12.2018** |
| திரட்டிய தேய்மானம் கட்டிடம் | 29,794,308 | - | 4,165,000 | - | 4,165,000 | - | 4,165,000 | 4,165,000 | 8,330,000 |
| தொழிற்சாலை மற்றும் இயந்திரங்கள் | 174,372,938 | - | 17,030,847 | - | 25,042,347 | - | 25,042,347 | 40,085,900 | 65,128,247 |
| | | | **8,011,500** | | | | | | |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 2,059,324 | - | - | - | - | - | - | - | 0 |
| அலுவலக தளபாடங்கள் | 4,011,099 | - | - | - | - | - | - | - | 0 |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் | 6,946,374 | 6,946,374 | 13,890,750 | 1,000 | 20,838,125 | - | 20,838,125 | 13,890,750 | 34,728,875 |
| தொழிற்சாலை கருவிகள், வகைகள் | 21,407,065 | - | 676,348 | - | 676,348 | - | 676,348 | 1,043,964 | 1,720,312 |
| கணினி, பாகங்கள் | 34,613,513 | - | 3,111,393 | - | 1,715,910 | - | 1,715,910 | 1,921,470 | 3,637,380 |
| | | | **(1,395,483)** | | | | | | |
| இலத்திரனியல் மீள் உள்ளீடுகள் | 2,572,950 | 2,572,950 | - | - | 2,572,950 | - | 2,572,950 | - | 2,572,950 |
| **மொத்தம்** | **297,517,582** | | **45,490,355** | **1,000** | **55,010,679** | **-** | **55,010,679** | **61,107,084** | **116,117,763** |
| **எழுத்துப் பெறுமதி** | **99,679,966** | | | | **1,093,382,090** | | | | **1,039,094,309** |

* / ** revalued under one category during the year

தலைவர்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2018 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிகூற்று பற்றிய 2018 ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 பிரிவின் படி கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்று

### 1.1 அபிப்பிராயம்

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2018 டிசம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, சொத்துக்கள் மாற்றமடைந்தமைக்கான கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் சுருக்கமான முக்கிய கணக்கீட்டு கோட்பாடுகளை உள்ளடக்கிய 2018 டிசம்பர் 31 திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆண்டு 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் ஆண்றிக்கையுடன் வெளிப்படுத்தப்பட வேண்டுமென நான் கருதும் எனது அபிப்பிராயங்கள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் படி எனது அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்தப்படும்.

இவ்வறிக்கையின் முன்பழியுள்ள செய்யப்பட்ட கருத்திற்கான அடிப்படைய பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்களிலான அழுத்தங்கள் தவிர, கூட்டுத்தாபனத்தின் 2018 டிசம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயற்பாடுகள் மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நேர்மையான நிலைமைகளை எடுத்தியம்புகின்றன என்பது பற்றிய எனது அபிப்பிராயம்.

### 1.2 முனைப்பழியுள்ள கருத்துரைக்கான அடிப்படை

(அ) அளவீட்டு ரீதியான கணக்கீட்டு தவறுகள்

(i) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூ.32,987,997 காசு மற்றும் வங்கி மீதிகளுக்கு மற்றுமொரு கணக்கின் ரூ.5,434,426/- வங்கி மேலதிகப் பற்றினை ஈடு செய்து தேறிய மீதியான ரூ. 27,553,571/- மாத்திரம் நிதி நிலைமைக் கூற்றின் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழ் காட்டப்பட்டமையால் வங்கி மேலதிகப் பற்று மற்றும் காசு மற்றும் காசுக்கு சமமானவை ரூ. 5,434,426 குறைவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) கடந்த ஆண்டின் ரூ. 91,924,671 பெறுமதியான இறுதி மூலப்பொருள் இருப்பு மீளாய்வு ஆண்டில் தவறாக ரூ. 93,911.088 ஆக முன்கொண்டு வரப்பட்டமையால் ரூ. 1,986,418 ஆல் மீளாய்வு ஆண்டின் தேறிய நட்டம் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(iii) கடந்த ஆண்டின் ரூ.34,351,421 பெறுமதியான இறுதி உதிரிப்பாகங்கள் இருப்பு மீளாய்வு ஆண்டில் தவறாக ரூ.32,856,421 ஆக முன்கொண்டுவரப்பட்டமையால் மீளாய்வு ஆண்டின் தேறிய நட்டம் ரூ.1,495,000 ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கணக்கீட்டு நியமங்களை தவிர்த்தல்

(i) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 79 (ஆ) அத்தியாயத்தின் படி மூலதனத்தில் உள்ளடக்கப்பட்ட இருப்பின் தன்மை, பேணப்படும் நோக்கம் ஆகியன பற்றி வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் பேணப்படும் ரூ.102,491 ஆன மூலதன இருப்பு, ரூ. 1,000,000 ஆன பொது இருப்பு, ரூ. 13,901,142 ஆன அபிவிருத்தி இருப்பு மற்றும் ரூ.808,011,707 மீள்கணிப்பீட்டு இருப்பு பற்றிய வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

- மீளாய்வு ஆண்டில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் ஆரம்ப மீதி ரூ. 15,643,749 ஆன போதிலும் இது ரூ. 15,801,749 ஆக இடப்பட்டு நிதிப்பாய்ச்சல் கூற்று சமப்படுத்தப்பட்டிருந்தது.

- மீளாய்வு ஆண்டில் நடைமுறை பொறுப்பின் அதிகரிப்பு ரூ. 8,078,063 ஆன போதிலும் நிதிப்பாய்ச்சல் கூற்றில் ரூ. 40,133 குறைவாக இவ்வதிகரிப்பு இணங் காணப்பட்டிருந்தது.

(iii) இலங்கை கணக்கீட்டு நியமம் 23

மீளாய்வு ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட அதிஷ்ட இலாபச்சீட்டு அச்சு இயந்திரத்திற்கென பெற்ற கடனுக்காக செலுத்தப்பட்ட வட்டியை இணங் கண்ட நியமத்தின் 09 அத்தியாயத்தின் படி மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மூலதமனமாக்கப்படவில்லை.

(இ) இணங்காத மீதி

(i) அரசாங்க அச்சக திணைக்களத்தினால் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 திகதியில் மீதி உறுதிப்படுத்தப்பட்டமைக்கு ஏற்ப இத்திணைக்களத்திற்கு ரூ. 8,325,817 அறவிடப்பட வேண்டியுள்ளதென அறிவித்திருந்த போதிலும், ரூ. 4,012,020 மாத்திரம் இத்திணைக்களத்திற்கு செலுத்தப்பட இருப்பதாக கூட்டுத்தாபன கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 திகதியில் தொகைமதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தின் மீதி உறுதிப்படுத்தலுக்கு ஏற்ப இத்திணைக்களத்தினால் செலுத்தப்படுவதற்கு எவ்வித கடன் நிலுவைகளும் இல்லாத போதிலும் இத்திணைக்களத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு ரூ. 11,836,011 செலுத்தப்படவுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(i) 06 ஆண்டுகள் மற்றும் அதற்கு கூடுதலான கூட்டுத்தொகை ரூ. 110,854,132 ஆன வர்த்தக கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லையென்பதுடன் இது மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 திகதியில் அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோர் மீதியான ரூ.326,777,812 நூற்றுக்கு 34 ஆகியது.

(ii) மீளாய்வு ஆண்டிறுதியில் தேசிய கடதாசிக் கம்பனியிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு ரூ. 9,753,427 அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தினால் கடதாசி கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ. 7,460,675 ஆக காணப்பட்டது. இம்மீதியில் 05 வருடங்கள் தாண்டிய கடன் தொகை முறையே ரூ. 7,989,976 மற்றும் ரூ. 5,578,142 ஆன போதிலும் இம்மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கடதாசி கம்பனியின் வர்த்தக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமையால் இம்மீதியை தீர்த்தல் பற்றி உறுதியற்றதன்மை அவதானிக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) ஏற்ப நான் கணக்காய்வு மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் நான் பொறுப்பை, இவ்வறிக்கையின் நிதி கூற்று கணக்காய்வு பற்றி கணக்காய்வாளரின் பொறுப்பு ஆகிய பகுதியில் மேலும் விளக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை ஏற்படுத்துவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானவையெனவும் பொருத்தமானவையெனவும் நாம் நம்புகின்றேன்.

## 1.3 நிதி கூற்றுக்கள் பற்றி முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதி கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பெறுமான ரீதியான போலி கூற்றுக்களின்றி நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏற்றவகையில் தேவையாகவுள்ள உள்ளக நிர்வாகத்தை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தை தொடர்ந்து நடத்துவதற்கான இயலுமை பற்றி தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகுமென்பதுடன், முகாமைத்துவத்தை வரிதாக்குவதற்கு உத்தேசிப்பதாயின் அல்லது வேறேதேனுமொரு மாற்றுவழி கிடைக்காத சந்தர்ப்பத்தில் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாயின் தவிர தொடர்ந்து நடத்தும் அடிப்படையில் கணக்குப் பதிவு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தை தொடர்ந்து நடத்துவதற்குரிய விடயங்களை உள்ளடக்குவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறைகளுடன் தொடர்புடைய பொறுப்பு, நிர்வாக தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆண்டு 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் படி, கூட்டுத்தாபனத்தின் ஆண்டு மற்றும் நடப்பு நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் சொந்த வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகளால் ஏற்படக்கூடிய பெறுமான ரீதியான போலி கூற்றுக்கள் அன்றியதென நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாய சான்று உயர் மட்டத்திலான சான்றாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு தரத்தின் படி கணக்காய்வு மேற்கொள்ளப்படும் போது இது எந்நேரமும் பெறுமான ரீதியிலான முரணான கருத்துரை உள்ளடக்கப்படுமென்பது உறுதிப்படுத்தப்படுவதில்லை. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பெறுமான ரீதியிலான முரணான கருத்துரை ஏற்படக்கூடுமென்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனாளர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் தாக்கம் ஏற்படலாமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகத்துடன் கொண்ட இலங்கை கணக்காய்வு தரத்தின் படி கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறினால் நிதி கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பெறுமான ரீதியிலான போலி கூற்றாளரின் அபாயத்தை இனம்காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு படிமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அபாயத்தை தவிர்ப்பதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பெறுமான ரீதியிலான போலி கூற்றுக்களிலிருந்து ஏற்படக்கூடிய தாக்கத்தை விட மோசடியால் ஏற்படக்கூடிய அழுத்தம் பாரியதாக காணப்படுவதுடன், கூட்டுச்சதி, போலி ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவறவிடல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவறவிடல் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகும்.

- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு படிமுறைகளை திட்டமிடுவதற்காக கூட்டுத்தாபனத்தின் நிர்வாகம் பற்றிய புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், உள்ளக நிர்வாகத்தின் உற்பத்தித்திறன் பற்றி அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு உத்தேசிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயப்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் தகைமை மதிப்பிடப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக கூட்டுத்தாபனத்தின் நீடித்த தொழிற்பாடு பற்றி பெறுமான ரீதியான நிச்சயமற்றத்தன்மை உள்ளதா என்பது பற்றி பெற்றுக்கொண்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்படையில் கணக்கியலுக்காக நிறுவனத்தின் நீடித்த தொழிற்பாடு பற்றிய அடிப்படையை பயன்படுத்தும் உரியதன்மை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்றத்தன்மை இருப்பதாக நான் முடிவு செய்வதாயின் நிதிக்கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டியதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றப்பட வேண்டும். எனினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நீடித்த தொழிற்பாடு நிறைவு செய்யப்படலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமை மதிப்பிடப்பட்டது.

  எனது கணக்காய்வில் இனம்காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், முதன்மை உள்ள நிர்வாக குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி நிர்வகிக்கப்படும் தரப்புகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

**2. வேறு சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவை பற்றிய அறிக்கை**

2018 ஆண்டு 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைகள் பற்றி விஷேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்படும்.

- 2018 ஆண்டு 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக கணக்காய்விற்கு தேவையான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், எனது விசாரணையிலிருந்து தெரியவந்ததாவது உரிய நிதி அறிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டுவந்துள்ளதென்பதாகும்.

- 2018 ஆண்டு 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (I) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பின்பற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் மற்றும் பெறுமான ரீதியிலான விடயங்களுக்கு வரையறுக்கப்படுவதனால், பின்வரும் கூற்றுக்கள் வெளிப்படுத்துவதற்கேனும் வகையில் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

- 2018 ஆண்டு 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் நிர்வாகச் சபையின் ஏதேனுமொரு உறுப்பினருக்கு கூட்டுத்தாபனம் இணைந்து ஏதேனுமொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சராசரி வர்த்தக நிலைக்கு புறம்பாக தொடர்பில்லை என்பது.

- 2018 ஆண்டு 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக பின்வரும் அவதானிப்புக்கள் தவிர ஏதேனுமொரு உரிய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் நிர்வாகச் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விஷேட ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாக அல்லாமல் செயற்பட்டுள்ளதென்பது.

| **சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கான குறிப்பு** | **ஏற்புடையதாகாமை** |
|---|---|
| (அ) 2015 மே 25 ஆம் திகதி இலக்கம் PED 1/2015 ஐ கொண்ட வணிக திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 4.2 பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி கூட்டுத்தாபனத்தின் மத்திய மட்ட முகாமையாளர்கள் 15 பேருக்காக குழுக்கள் போக்குவரத்து சேவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காது இதற்கு பதிலாக ஒருவருக்கு மாதாந்தம் ரூ. 17,500 ஊடாக பகுப்பாய்வு ஆண்டில் ரூ. 3,150,000 கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) 1942 ஆண்டு இலக்கம் 45 கொண்ட தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 41 பிரிவு | தீ விபத்து எச்சரிக்கை சமிக்ஞை கட்டமைப்பு நிறுவப்பட்டிருக்கவில்லை. |

- 2018 ஆண்டு 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள், பணிகள், செயற்பாடுகளுக்கு ஏற்புடையதாகாத வகையில் செயற்பட்டுள்ளதென்பது.

- 2018 ஆண்டு 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் வளங்கள் சிக்கனமாக, செயற்றிறனாக மற்றும் பயன்தரக்கூடிய வகையில் காலப்பகுதியில் உரிய சட்ட விதிகளுக்கு ஏற்ப கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லையென்பது.

3. **ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) தேசிய லொத்தர் சபையுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி லொத்தர் அச்சிடலானது உரிய திகதியில் கையளிக்கப்படாமையினால் பகுப்பாய்வு ஆண்டில் லொத்தர் சபையினால் செலுத்த வேண்டிய தொகையில் ரூ. 10,181,000 தண்டப்பணமாக குறைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டில் பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிட்டு கையளிப்பதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி 01 நாள் தொடக்கம் 26 நாட்கள் வரையான கால தாமதத்தில் அச்சிடப்பட்ட பாடசாலை பாடப்புத்தகங்களை கையளித்தல் காரணமாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தில் ரூ. 38,262,345 தாமதக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தின் பாதுக்க பானலுவவிலுள்ள காணியின் மதிப்பிடப்பட்ட பெறுமதியிலான ரூ. 107,000,000 13 ஏக்கர் 02 ரூட் 06 பர்ச்சஸ் பரப்பளவு கைத்தொழில் பேட்டையொன்றை ஏற்படுத்துவதற்கு கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு ஒப்படைக்கப்படுவதற்கு அல்லது திரும்ப பெற்றுக்கொள்வது பற்றி உரிய தீர்மானத்தை எட்டுவதற்கு கூட்டுத்தாபனம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூ. 203,509,234 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட லொத்தர் அச்சு இயந்திரத்திற்குரிய கடவுச் சொல்லை (password) இயந்திர உற்பத்தி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் செயற்படாமையினால் இயந்திரத்திற்கு மென்பொருளை உட்செலுத்துவதற்கு உற்பத்தி நிறுவனமான இந்திய நிறுவனத்தை தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டமை. மேலும் இயந்திரத்தின் உத்தரவாத காலம் பகுப்பாய்வு ஆண்டில் நவம்பர் 20 திகதி முடிவடைந்திருந்த போதிலும் கூட்டுத்தாபன உற்பத்தியாளரின் தேசிய பிரதிநிதியுடன் வருடாந்த பராமரிப்பு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) லொத்தர் அச்சு இயந்திரத்தின் செயற்பாடுகளுக்கு வருடாந்த Flexo டேப் ரோல் தேவைப்பாடு 5 ரோலாக இருந்ததுடன் இதனை கருத்திற்கொள்ளாது ரூ. 3,115,200 செலவிட்டு 2017 ஆண்டில் 66 டேப் ரோல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதில் பகுப்பாய்வு ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதியளவில் சேர்க்கப்பட்ட ரூ. 2,879,200 பெறுமதியான 61 டேப் ரோல் களஞ்சியத்தில் எஞ்சியிருந்ததுடன் இவை காலாவதியாக இருந்தன.

டப்ளியு. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

# நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

## 1.2 மதிப்பீட்டு அடிப்படை

### (அ) அளவீட்டு கணக்கீட்டு குறைகள்

(i) 2019 நிதியாண்டில் இவ்விடயம் கருத்திற்கொள்ளப்பட்டு சரியாக சமர்ப்பிக்கப்படும்.

(ii) அடுத்த நிதியாண்டில் பிழைகள் திருத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படும்.

(iii) தேவையான திருத்தங்கள் 2019 ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

### (ஆ) கணக்கீட்டு நியமங்களுக்கு அப்பால் செயற்படுதல்

(i) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01

கூட்டுத்தாபனத்தின் ஆரம்பத்தில் மூலதன இருப்பு நிறுவப்பட்டிருந்ததுடன் இறுதி கணக்குகளில் இது போதுமானளவில் குறிப்பாக குறிப்பு இலக்கம் 4.3.1 இல் மற்றும் மீள்மதிப்பீட்டு இருப்பு பற்றிய குறிப்பு இலக்கம் 4.3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

- கடந்த ஆண்டில் ஊழியர் பயிற்சிக்காக ரூ.158,000/- செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக்கொடுப்பனவு சட்டரீதியான கொடுப்பனவாக காணப்படவில்லையென்பதால் மீண்டும் அவ்வூழியர்களிடமிருந்து அறவிடப்பட்டது. இது கடந்த 2017 ஆண்டின் கொடுப்பனவு என்பதால் மீண்டும் தயாரிக்கப்பட்ட கணக்குகளில் திருத்தப்பட்டது.
- அடுத்த நிதியாண்டில் சகல பொறுப்புக்களும் சரியாக இனம் காணப்பட்டு சமர்ப்பிக்கப்படும்.

(iii) இலங்கை கணக்கீட்டு நியமம் 23

2018 ஆண்டின் முதல் காலாண்டில் இயந்திரம் பயன்படுத்தப்பட்டமையால் அதுவரை செலுத்தப்பட்ட வட்டிச் செலவினம் மூலதனமயமாக்கப்பட்டுள்ளது.

### (இ) பொருந்தாத மீதி

(i) எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) இம்மீதி கூட்டுத்தாபன கணக்குகளுக்கு ஏற்ப கிடைக்க வேண்டிய பணமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திடமிருந்து இது பற்றி எழுத்துமூலம் விசாரித்த பின்னர் அறிக்கையொன்றை பெற்றுக்கொண்டு அதனை பணிப்பாளர்சபையிடம் சமர்ப்பித்து அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

**(ஈ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) தற்போது கடன் அறவீடு முன்னேற்றத்தை காட்டுகின்ற போதிலும் பழைய கடனை அறிவிடுவதற்கான நடவடிக்கைகள் சட்டப்பிரிவு, கணக்காய்வு பிரிவு, நிதிப்பிரிவு மற்றும் விற்பனை பிரிவு ஆகியன இணைந்து செயற்படும்.

(ii) கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை பெற்றுக்கொள்வதற்காக தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் தலைமை அதிகாரியிடம் மீண்டும் நினைவூட்டல் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2. வேறு சட்ட மற்றும் ஒழுங்கு தேவைகள் பற்றிய அறிக்கை

**சட்ட நிபந்தனைகளுக்கான குறிப்பு**

(அ) திரவநிலை சிறந்த நிலைக்கு மாறியதும் குறிப்பிடத்தக்க வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு மத்திய மட்ட முகாமையாளர்களுக்கு சுற்றுநிருபங்களுக்கு ஏற்ப போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

(ஆ) தீ விபத்து எச்சரிக்கை சமிக்ஞை கட்டமைப்பொன்றை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் அது சிறந்த நிலையில் இல்லாமையினால் மீண்டும் ஒரு கட்டமைப்பை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) லொத்தர் அச்சு இயந்திரம் நிதமும் பழுதடைவதாலும் கூட்டுத்தாபனத்தின் நிதி பிரச்சினை காணரமாகவும் லொத்தர் அச்சுக்கு தேவையான மூலப்பொருட்கள் உரிய வகையில் கிடைக்காமையும் இதற்கு காரணமாகும்.

(ஆ) அப்போது நாட்டில் நிலவிய அரசியல் ஸ்த்திரமற்ற தன்மையால் அன்றை தினம் முதல் 4 மாதங்கள் வரையான காலத்தில் கூட்டுத்தாபனத்தில் தலைவரொருவரோ அல்லது பணிப்பாளர் சபையோ இல்லாமையினால் கொள்வனவு குழு இல்லாமையினால் பாடப்புத்தகங்களுக்கு தேவையான கடதாசி இறக்குமதி மற்றும் வேறு மூலப்பொருள் கொள்வனவு செய்வதில் பல பிரச்சினைகள் காணப்பட்டன. அத்துடன் கூட்டுத்தாபனத்தில் காணப்பட்ட நிதி பிரச்சினை இதற்கு காரணமாக அமைந்ததுடன் இதனால் பாடப்புத்தக தாமதக் கட்டணமும் செலுத்த வேண்டியேற்பட்டது.

(இ) கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் அமைச்சரவை பத்திரமொன்றுக்கு அமைவாக 25 மில்லியனுக்கு காணியொன்றை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதுடன் அரசாங்க மதிப்பீட்டு பெறுமதியான 107 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு தற்சமயம் அமைச்சரவை பத்திரமொன்று கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதன் தீர்மானத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) அமைச்சுக்களின் முகவர் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து தற்சமயம் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் அதன் தீர்மானத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) உரிய பொருள் பற்றி பூர்வாங்க நடைமுறை அறிவின்மையால் அதனை பெற்றுக்கொள்ள கட்டளைகள் விடுக்கப்பட்டிருந்ததுடன் அது எதிர்காலத்தில் பயன்படுத்தப்படவுள்ளது.